2022 ஜனவரி 7]

அடிப்படையிலே அதைப் பரிசீலிக்கலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. G.V. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது விளாத்திகுளம் பகுதி அதிகமான தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற பகுதியாக இருக்கிறது. தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் பகுதி, பல தொழில்முனைவோர்கள் உருவாகின்ற பகுதியாகவும் இருப்பதால், இதனைக் கருத்திற்கொண்டு, வருகிற காலங்களில் இப்பகுதியினுடைய தரத்தை முன்னேற்றுவதற்கு பொற்கால தமிழகத்தினுடைய முதல்வர், தவறுகள் செய்தவர்களையும் தாயுள்ளத்தோடு மன்னிக்கிற தமிழகத்தினுடைய தவப்புதல்வருடைய நல்லாட்சியில் விளாத்திகுளத்தில் எதிர்காலத்தில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படும் என்று சொன்ன அமைச்சர் அவர்களுக்கு நன்றிகூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

தினசரி ஊதியம்

***2794—திரு. பொன். ஜெயசீலன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பெறும் தினசரி ஊதியத்தினை ரூ.500/– ஆக உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கடந்த ஓராண்டு காலமாகவே தேயிலை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும், உலகச் சந்தையில் தேயிலையின் வரத்து 30.81 விழுக்காடு வரை உயர்ந்து வருவதாலும், தேயிலையின் சராசரி விலை ரூ.114/– ஆக குறைந்துள்ளதாலும், தேயிலை தயாரிக்கும் செலவு ரூ.117.03 அதிகமாக இருப்பதாலும், தற்போது தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகம் கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்து வருகின்ற இச்சூழ்நிலையிலும், அக்கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியத்தை உயர்த்தி வழங்குவது குறித்த கருத்துரு பரிசீலனையில் உள்ளது என்பதனை தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தங்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆட்சிக்கு வந்தால், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக, தமிழ்நாடு அரசு தேயிலைத் தோட்டக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.500/– தினக் கூலி வழங்கப்படும் என்ற உறுதிமொழியை வழங்கியிருக்கின்றீர்கள். அதேபோன்று, அரசின் வரைவு அறிக்கையிலும் ரூ.425.50 தினக் கூலியாக வழங்கப்படும் என்ற உறுதியும் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே, வரைவு அறிக்கையில் உறுதியளித்தபடி, ரூ.425.50 தினக் கூலியையாவது இந்த அரசு வழங்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களின் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 15–6–2008–ல் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.338.23 ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. அதன் பிறகு, சுமார் 10 ஆண்டு காலம் அ.தி.மு.க. அரசு, பரிந்துரைக்கப்பட்ட*

ஊதியத்தை உயர்த்தாமல் விட்டுவிட்டு, 28–11–2019–ல் தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு தினசரி ஊதியத்தை அகவிலைப்படியுடன் சேர்த்து ரூ.350.73 ஆக, அதாவது. ரூ.12.50 மட்டுமே உயர்த்தி வழங்கியது.

மேலும், கடந்த ஆட்சிக் காலத்தில் 2013 முதல் 2021, இறுதி வரை தேயிலைத் தோட்டக் கழகத்திற்கு ரூ.202 கோடியே 60 இலட்சத்து 97 ஆயிரத்து 458 நிகர நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே நம்முடைய முதல்வர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடன், அரசாணை எண் 330, தொழிலாளர் நலன் மற்றும் திறன் வளர்ச்சித் துறை, நாள் 30–7–2021–ல், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்கீழ், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை ஊதியத்தை, மாறுபடும் அகவிலைப்படியுடன் உயர்த்தி வழங்க முன்னறிவிப்பு (preliminary notification) வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஊதிய உயர்வு குறித்து அமல்படுத்த ஆணை பெறப்படும்பட்சத்தில், அதனை தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத் தொழிலாளர்களுக்கு வழங்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தங்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியில் நிலவும் பிரிவு 17 பிரச்சினையின் காரணமாக. அங்கு வாழக்கூடிய சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின் வசதி இல்லாமல் இருக்கின்றன. தற்போது, கொரோனா பெருந்தொற்றுக் காலம் என்பதால், அங்கு வாழக்கூடிய மாணவர்கள் பாடங்களை online வாயிலாகவே படிக்கக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. எனவே, அரசு கருணைகூர்ந்து அந்த இல்லங்களுக்கெல்லாம் மின்னிணைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுடைய வாழ்வில் ஒளிவிளக்கு ஏற்றித் தருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நான் முன்னதாகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு

சென்றுள்ளேன். நேற்றையதினம், நமது தலைமைச் செயலாளர் அவர்களிடம், அந்தப் பிரச்சினை பற்றி எடுத்துக்கூறி, இதற்காக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கூறினேன். ஏனென்றால் பிரிவு 17 என்ற பிரச்சினை 1969 முதல் அந்தப் பகுதியில் இருந்து வருகிறது. இன்று வரை அது தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது. அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால், உச்ச நீதிமன்றம் வரை செல்லக்கூடிய சூழல் இருக்கின்றது. எனவே, அதுகுறித்து, நேற்றையதினம் தலைமைச் செயலாளர் அவர்களிடத்தில் பேசியிருக்கிறேன். அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். வால்பாறை மலைப் பகுதியில் வாழ்கின்ற தொழிலாளர்கள், தினக் கூலியை உயர்த்தித் தர வேண்டும் என்று இந்த அரசிடம் மன்றாடிக் கேட்டபோது, 30–6–2021–ல் ரூ.425.50 ஊதியம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அவ்வாறு அறிவிக்கப்பட்டு 6 மாத காலம் ஆகின்றது. ஆனால், இதுவரை அந்த ஊதியம் வழங்கப்படவில்லை. நான் என்னுடைய கன்னிப் பேச்சிலே குளிர் பிரதேசமான வால்பாறை பகுதியிலே வாழ்கின்ற கூலித் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள், அவர்களுக்கு 500 ரூபாய் ஊதியம் வழங்க வேண்டுமென்று பதிவிட்டிருந்தேன். மீண்டும் இந்த அவையிலே அதைப் பதிவு செய்கின்றேன். இது அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை. எனவே, கூலித் தொழிலாளர்களுக்கு ரூ.500 என ஊதியம் வழங்க வேண்டுமென்று இந்த அரசை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஜனவரி 7]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் இதுகுறித்துச் சொன்னேன். அதாவது, தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை, அரசாணை எண் 330—ல் இதுசம்பந்தமாக அரசு அறிவித்தது. அது தொடர்ந்து இப்போது ஆய்வில் இருக்கிறது.* Meeting *முடிந்து,* preliminary notification *கொடுத்திருக்கிறார்கள். ஆய்வு முடிந்து அந்தக் குழு என்ன அறிவிக்கின்றதோ, அந்தச் சம்பளத்தைக் கொடுத்துவிடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ், மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

மண்ணெண்ணெய் விநியோகம்

***14324—முனைவர் த. இனிகோ இருதயராஜ்:**

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் மாதம் ஒன்றுக்கு 10 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கவும், அதன் விலையைக் குறைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய பதிலை பேரவைக்கு அளிக்க விரும்புகிறேன்.*

தற்போது நியாய விலைக் கடைகளில் இன்றியமையாப் பண்டங்கள் பெற்று வரக்கூடிய 2 கோடியே 18 இலட்சத்து 19 ஆயிரத்து 223 குடும்ப அட்டைகளுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 10 லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்க 2 இலட்சத்து 18 ஆயிரத்து 192 கிலோ லிட்டர் தேவைப்படும். ஆனால், ஒன்றிய அரசால் மாநிலத்திற்கு வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் 2006 ஏப்ரல் திங்களில் 59 ஆயிரத்து 852 கிலோ லிட்டராக இருந்த நிலையில், இந்த ஒதுக்கீடு படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது மாதாந்திர ஒதுக்கீடு 7,536 கிலோ லிட்டர் மட்டுமே ஒதுக்கப்படுகிறது. ஆதலால்,